
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 1 | மார்ச் 1988 | இதழ் 3

## பரிசுத்த



## வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

# கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

உங்கள் ஊரில் கூடி வருகிற கிறிஸ்துவின் சபைகளைப் பற்றி எங்களுக்கு எழுதியனுப்பினதற்கு நன்றி. இதுவரை பிரசுரிக்காமல் இருந்தாலோ அன்றி பிரசுரித்ததில் தெளிவான விலாசங்கள் இல்லாமல் இருந்தாலோ, விலாச மாறுதல்கள் இருந்தாலோ தயவு செய்து எங்களுக்கு எழுதுங்கள்.

சபைகளுக்கு மொத்தமாக இதழ்கள் அனுப்பும் திட்டம் தற்சமயம் இல்லை. படிக்க விரும்புகிற ஒவ்வொருவருடைய விலாசமும் எங்களுக்குத் தேவைப்படும், ஆகவே சிரமத்தைப் பாராமல் தனித்தனியாக விலாசங்களை அனுப்பி ஒத்துழைக்க வேண்டுமாய் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

**இந்த இதழின் உள்ளே :**



பிரசங்கிமார்களுக்கு ஓர் பிரசங்கம் 1

கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான் 7

திரும்பிச் செல்வோம் வாரீர்! 11

நியாயத் தீர்ப்பும் தேவனுடைய வீட்டாரும். 21

புதிய ஏற்பாட்டை நான் சிலுவை வழியே காண்கிறேன் 27

# THIRUMARAI AASAAN

Editor:
J C. CHOATE

Managing Editor
E. Z. SELVANAYAGAM

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 1 March 1988 Issue 3


ஆசிரியவுரை

## பிரசங்கிமார்களுக்கு ஓர் பிரசங்கம்

பிரசங்கியார் என்ருல் மற்றவர்களுக்கு உபதேசிப்பவர்கள், போதிப்பவர்கள், செய்தி அறிவிப்பவர்கள் என்று பொருள். தற்காலத்தில் ஊர்கள் தோறும் நம் கண்களில் தென்படுபவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்று கூறிக்கொள்ளும் நபர்கள் தான் என்ருல் மிகையாகாது.

புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி கிறிஸ்தவர்களாக மாற்றப் பட்டிருக்கிற ஒவ்வொருவருக்கும் "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்கிற கட்டளை பொருந்தும் என்பது உண்மையே. மாற்கு 16:15; மத் 28:19, 20. முதல் நூற்றாண்டில் அப்படிச் செய்யவும் செய்தார்கள் அப் 8:4. அதற்கென்று யார் வேண்டுமாஞலும் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு நான் பிரசங்கி என்று புறப்பட்டு விடுவது என்று அர்த்தமா? எல்லாவற்றுக்கும் ஒரு ஒழுங்கும், கட்டுப்பாடும் வேண்டாமா? இதை-யெல்லாம் மனதில் வைத்துத் தான் அப்போஸ்தலஞகிய பவுல் அன்றே வருத்தம் தோய்ந்த குரலில் "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னது என்றும் அறியா திருந்தும் நியாயப் பிரமாண போதகர்களாக இருக்க விரும்புகிருர்கள்" என்று சொன்ஞர் 1 தீமோ 1:7.

ஆகவே பிரசங்கிக்க விரும்புகிற ஒருவருக்கு குறைந்த பட்சம் கீழ்க்காணும் சில தகுதிகளாவது இருக்கவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

முதலாவது, அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களைக் குறித்த பாரம் அழுத்துவதின் காரணமாக பிரசங்கிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும்.

இரண்டாவது, அப்படிச் செய்வதற்குரிய தகுதியும், கர்த்தருடைய வசனத்தில் தேர்ச்சியும் இருக்கவேண்டும். பின்னர். தான் போதிக்கிற ஒழுக்க நெறிகளைத்தானே கடைப்பிடித்து மற்றவர்களுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டவேண்டும். இப்படிச் சொல்லும்போது ஒரு சிலர் அதெல்லாம் தேவையில்லை, நாம் என்ன பேச வேண்டும் என்பதை அந்தந்த சந்தர்ப்பங்களில் ஆவியானவர் வெளிப்படுத்துவார் என்று சொல்வர். அதெல்லாம் அறியாமையின் அலங்கோலமே.

தேவன் வெளிப்படுத்த வேண்டிய சத்தியங்களை யெல்லாம் ஏற்கனவே சில பரிசுத்தவான்கள் மூலம் பரிசுத்த ஆவியைக்கொண்டு வெளிப்படுத்திவிட்டு, இவைகள் போதும் என்றும் (2 தீமோ 3:16,17) இதோடு ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ வேண்டாம் என்றும் (வெளி 22-18, 19) கூறியிருக்கிறார். அதனால்தான் பேதுருவும் ''ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கவேண்டும்' என்று கூறுகிறார். 1 பேது 4 : 11.

திருவசனத்தைப் பிரசங்கி என்று பவுல் இளைஞனாகிய தீமோத்தேயுக்கு அறிவுரை கூறுகிறார். 2 தீமோ 4:2 தேவன் தம்முடைய எல்லா ஆலோசனைகளையும் வேத வாக்கியங்களின் மூலமாக வெளிப்படுத்தி விட்ட பிறகு (அப் 20:26) மீண்டும் இன்றைக்குப் புதிது புதிதாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வெளிப்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருப்பது தேவையில்லாத வேலையல்லவா?.

''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாக இருக்க வேண்டுமானால் சத்திய வசனத்தைப் நிதானமாய்ப் பகுத்துப் போதிக்க வேண்டும்'' (2 தீமோ 2; 15) என்று தீமோத்தேயுக்கு அன்றே அறிவுரை கூறினவர், ''வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்'' (யோவான் 5 : 39) என்று யூதத் தலைவர்களுக்கு யோசனை சொன்னவர், மிக மலிவு விலையிலும், சிற்சில சமயங்களில் இலவசமாகவும் வேதாகமங்கள் அவரவருடைய தாய்மொழியிலே கிடைக்கும் காலத்தில் வாழுகிற நமக்கு 'ஸ்பெஷலாக' வெளிப்பாடு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது நம்முடைய சோம்பேறித் தனத்தையும், நாம் ஏதோ ''விசேஷப் பிறவிகள்'' என்று மக்கள் நம்மை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தான் காட்டுகிறதே தவிர மற்றபடி உண்மையல்ல.

பிரசங்கி நண்பனே! வேதாகமத்தைப் படிக்காமல் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளவே முடியாது என்பதை நினைவில்கொள். வேதாகமத்தைப் படிக்காமல் பிரசங்கிப்பீரானால் ஏதோ நீர் கேள்விப்-

பட்டதையும், பார்த்ததையும், உம்முடைய மனக்குழப்பத்தில் கண்ட சொப்பனங்களையும் பிதற்றலாமே தவிர அது கர்த்தருடைய நற்செய்தியாக இருக்க முடியாது.

ஒரு வேதாகமக் கல்லூரியிலோ அன்றி பிரசங்கியாரைப் பயிற்றுவிக்கிற ஓர் குருகுலப் பள்ளியிலோ வேதாகமத்தைக் கற்றவர்கள்தான் பிரசங்கிக்க வேண்டும் என்பது என் வாதம் அல்ல. ஆனால் ஒருவர் முறையாக சத்தியவசனத்தைகேட்டு, விசுவாசித்து; சுவிசேஷத்துக் கீழ்ப்படிந்து, கிறிஸ்தவனாக மாறாமல் தேவன் அங்கீகரிக்கிற பிரசங்கியாக இருக்க முடியாது என்பது மட்டும் உண்மை. அதாவது ஒருவர், தானே மறுபடியும் பிறந்த அனுபவம் இல்லாமல் மற்றவர்களைச் சுவிசேஷத்துக்குக் கீழ்படியச் செய்வது இயலாத காரியம். தன்னுடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் உபதேச அடிப்படையில் அமைத்துக் கொண்டு வாழாதவர் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்துவது என்பது அதைவிடக் கடினம். ஏனெனில் நீங்கள் போதிக்கிறபடி வாழ்கிறீர்களா என்பதை உம்மைச் சுற்றி இருக்கிற மக்கள் கவனிக்கிறார்கள். அதனால்தான் ரோமர் 21-22 ஆகிய வசனங்களில் ''மற்றவர்களுக்குப் போதிக்கிற நீ உனக்குத் தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபச்சாரம் செய்யக் கூடாது என்று போதிக்கிற நீ விபசாரம் செய்யலாமா?'' என்று குத்திக் காட்டுகிறார்.

தற்காலத்தில் தேவ ஊழியத்தை மேற்கொள்ளுகிற நபர்கள் பலரின் நோக்கங்கள் அவ்வளவு புனிதமாக இல்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. சிலபேர் ''நகக் கண்ணில் அழுக்குப் படாமல்'' சொகுசான வாழ்க்கை வாழ்ந்து, மக்கள் மத்தியில் மாலை மரியாதை பெறலாம் என்று நினைத்து ஊழியத்தை மேற்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் பரலோகத்துக்குச் செல்வதை விட அமெரிக்கா அல்லது ஐரோப்பாவிற்குச் செல்லவேண்டும் என்ற விருப்பம் கொண்டு, எப்படியோ ஒரு வெளிநாட்டு மிஷனரிகளோடு தொடர்பு கொள்வதற்கு இது ஒரு குறுக்குவழி என்று எண்ணி உபதேசத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தேவ ஊழியத்தை மேற்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் வேறு வேலைதேடி அலுத்துப்போய் இதையாவது செய்யலாமே என்றும், வேறு சிலர் உத்தியோகம் பார்க்கிற காலத்தில் தேவனுடைய காரியங்களைப்பற்றி அக்கரைப்படாமல் இருந்து விட்டு ஓய்வு பெற்ற பிறகு வேதபோதகராகி விடுகின்றனர். இவைகள்தான் ஒருபிரசங்கியாரின் நோக்கமாக இருந்தால், பவுல் கொரிந்தியருக்குச் சொன்னதைத்தான் அவர்களுக்கும் சொல்ல வேண்டியதாக இருக்கும் ''இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனுஷரையாக்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாக இருப்போம். 1 கொரி 15 : 19

கர்த்தருக்கு ஊழியம் செய்யும் ஒருவர் காற்றை உண்டு தண்ணீரை மட்டும் பருக வேண்டும் என்று ஒருவரும் சொல்லவில்லை. ''வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான் என்று லூக் 10 : 7; 1 தீமோ 5 : 18 ஆகிய வசனங்கள் நமக்குச் சொல்லுகின்றன. சுவிசேஷம் சொல்லப்பட்டிராத பகுதி ஒன்றைத் தேர்ந்தெடுத்து அங்கே நீங்கள் ஊழியம் செய்ய விருப்பப்பட்டால் ஒரு மனிதனிடமிருந்தோ ஒரு சபையிடமிருந்தோ பொருளாதார உதவியை நாடுவது தவறல்ல. ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து அவர்களுக்கு கொடுப்பதில் உள்ள ஆசீர்வாதத்தை-யும், தங்களுடைய ஆன்மாவின் மேம்பாட்டுக்காக ஊழியம் செய்யும் ஒருவருடைய சரீரத் தேவைகளைத் தாங்குவது தங்கள் கடமை என்றும் வேதம் போதிக்கிறது என்பதை உணர்த்தி கூடியவிரைவில் தன்னிறைவு பெற முயற்சிக்கவேண்டும்.

வேறொரு சபையோ அன்றி தனி மனிதனோ உங்களுடைய தேவைகளைச் சந்திக்க முன் வராவிட்டாலும் உங்களுக்குக்கு பிரசங்கிக்க வேண்டும் என்ற ஆத்தும பாரம் இருந்தால் பவுல் அப்போஸ்தலனைப் போல ஏதாவது ஒரு வேலையைச் செய்து கொண்டு எஞ்சிய நேரத்தில் கர்த்தருடைய பணியை மேற்கொள்ளலாம். (1 கொரி 4:12). கர்த்தர் உங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதித்து ஆத்துமாக்களைத் தரும் பொழுது அவர்கள் உங்களுடைய ஊழியத்தைத் தாங்கும் நிலை வரலாம். அதெல்லாம் சிரமம் என்று கருதுவீரேயானால் நீர் ஊழியம் செய்து தீரவேண்டும் என்று தேவன் வற்புறுத்துவதில்லை. ஒருவரும் உதவ முன் வரவில்லையே என்றும் குறைபட்டுக்கொள்ள வேண்டாம்.

சில பிரசங்கிமார்களுடைய வாழ்க்கை மக்கள் மனதில் கிறிஸ்-தவத்தைப் பற்றித் தவறான எண்ணம் கொள்ளும்படி மோசமாக இருக்கிறது என்பது மற்றொரு புகார். தேவ ஊழியம் என்பது ஓர் அர்ப்பணிப்பு, சுய வெறுப்பு வாழ்க்கை என்பது மாறி ஏதோ ஓர் அரசு உத்தியோகம், வாழ்வதற்கு ஒரு வழி என்று எண்ணும்படி நடந்துகொள்கின்றனர். அப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்கள் வேறு ஒரு நபர் மூலமாய் இதைக் காட்டிலும் அதிகம் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றால் இதுவரை தாங்கள் போதித்து வந்தவைகளை மூட்டைகட்டி வைத்து விட்டு புதியவர் சொல்லுகிறபடி போதிக்கவும் தயங்கமாட்டார்கள். இப்படிப்பட்ட மனப்பான்மை கிறிஸ்தவத்துக்கு செய்யும் பெரிய துரோகம் இது கர்த்தருக்கும் அருவருப்பு இதைப் பற்றி இன்னும் எத்தனையோ சொல்லலாம். எனினும் இத்துடன் நிறுத்திக்கொண்டு ஒரு சிறந்த பிரசங்கி எப்படி இருக்க வேண்டு-மென்பதற்கு சில ஆலோசனைகள் கூறுவோம்.

1. முதலாவது வேதம் கூறுகிற முறையில் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்து அவருடைய சரீரமாகிய சபையில் அங்கம் வகிப்பராக இருக்கவேண்டும்.

2. மாயம் பண்ணாமல், உண்மைக் கிறிஸ்தவ நெறிகளைப் பின்பற்றி வாழவேண்டும்.

3. தற்காலத்து அறிவுபடைத்த மக்களையும் கூசாமல் அணுகி சத்தியத்தை அறிவிக்கும் அளவுக்குப் போதுமான கல்வித்தகுதி பெற்றபின் வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள வாஞ்சிக்க வேண்டும். இதற்கு உதவியாக அஞ்சல்முறை வேதாகமப் பயிற்சிகள் பல இருக்கின்றன. அதுபோக புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைப் பற்றி உபதேசக் குறைபாடுகள் இல்லாமல் எழுதப்பட்ட நல்ல நூல்களை வாங்கி வாசிக்கவேண்டும்.

4. அனுபவமுள்ள மூத்த கிறிஸ்தவர்களிடத்தில் கேட்டு உங்கள் ஐயங்களை நிவர்த்தி செய்து உங்கள் வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

5. வாய்ப்புக் கிடைத்தால் அதை நல்ல முறையில் பயன்படுத்தி மக்களுக்கு ஜெபத்துடனும், அடக்கத்துடனும், உற்சாகத்துடனும் சத்தியத்தை பிரசங்கிக்கவேண்டும்.

6. திருமணம் செய்யும்பொழுது ஒரு கிறிஸ்தவப் பெண்மணியையே திருமணம் செய்துகொள்ளுங்கள். அவர்கள் உங்கள் ஊழியத்துக்கு உதவியாக இருப்பதோடு ஒரு முன்மாதிரியான குடும்பம் அமைவதற்கு நல்ல சூழ்நிலை ஏற்படும்.

7. ஊதியத்தைக் கருதாமல் உண்மை மனதோடும், ஆத்தும பாரத்தோடும் மனிதருடைய பார்வைக்கு ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.

8. ஊதியம்பெற வாய்ப்பு இல்லாவிட்டால் உங்கள் சொந்தக் கைகளினால் வேலை செய்துகொண்டு ஒழிந்த நேரங்களில் ஆத்தும ஆதாயப்பணி செய்யுங்கள். ஒரு காலகட்டத்தில் உங்கள் ஊழியத்தைத் தாங்கும் அளவு உறுப்பினர்கள் சேர்ந்த பிறகு முழு நேர ஊழியத்தை மேற்கொள்ளலாம்.

9. எந்தச் சூழ்நிலையிலேயும் சத்தியத்தையே போதியுங்கள், எந்த ஒரு மனிதனுக்காகவோ, அல்லது எந்த ஒரு காரணத்துக்காகவோ சத்தியத்தோடு சமரசம் செய்யாதீர்கள் மேற்சொன்ன முறைகளைக் கைக்கொண்டு உண்மையும் உத்தமுமாய்க் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தால் கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்துக் காத்துக்கொள்வார். உங்கள் வாழ்க்கையைக் கவனித்துப் பார்க்கும் மக்கள் மத்தியிலும் உங்களுக்கு நற்கீர்த்தி உண்டாகும்.

மக்கள் தொகையில் உலகத்தின் இரண்டாவது பெரிய நாடாகி விளங்கும் இந்தியாவுக்கு இப்படிப்பட்ட குணநலன்கள் பொருந்திய ஊழியர்கள் ஏராளமாகத் தேவை. ஜெபியுங்கள் 'அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால் அறுப்புக்கு எஜமான் வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்' மத் 9:37, 38.

**ஜே. சி. சோட்.**

ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? மத்16:26.

ஹடயோகி ஒருவன் ஒரு மகானிடம் சென்று தனக்கு ஆகாயத்தில் பறக்கும் வித்தை தெரியும் என்றும், பூமிக்கடியில் அநேக நாட்கள் கிடக்கும் திறன் உண்டென்றும், ஜலஸ்தம்பம் தெரியும் என்றும் பெருமை பாராட்டினான்.

அதைக் கேட்ட மகான் "அப்பா, பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன, புழுக்கள் பூமிக்கடியில் அதிக காலம் மறைந்து கிடக்கின்றன, மீன்கள் நீரில் வாழ்கின்றன. இம்மாதிரி நம்மைவிட தாழ்ந்த ஜந்துக்கள் செய்வதுபோல் செய்வதில் என்ன பயன்? கடவுளைப் போல இருக்கவேண்டும் என்று உறுதிபூண்டு நற்பணிகளை விருத்தி செய்ய முயற்சி செய். கர்வத்தையும், கோபத்தையும் அடக்கிவிடு என்று அறிவுரை கூறினார்."

"மனிதன் உலகம் முழுவதையும் ஊதியமாகப்பெற்றாலும், அவனது ஆன்மாவை இழந்து விடுவானானால் அவன் அடையும் பயன் என்ன?"
மத் 16:26 (திருத்திய மொழி பெயர்ப்பு:

அநீதியாலும், அக்கிரமத்தினாலும் சேர்க்கப்பட்ட பொருள் தன்னை உடையவர்களையே ஒருநாள் அழிக்கும்.
நீதி 1:19

# கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?

உலக வரலாற்றில் மாபெரும் போதகர் (Master teacher) என்று அறிஞர்களாலும், பண்டிதர்களாலும் ஒருங்கே பாராட்டப்படுகிற நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவபக்திக்கும் நல்லொழுக்கத்திற்கும் சீரான வாழ்க்கை நெறிக்கும் தேவைப்பட்ட ஏராளமான நல் உபதேசங்களையும் கட்டளைகளையும் கொடுத்திருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் காற்றில் பறக்க விட்டு விட்டு "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற ஒரு கட்டளையை மாத்திரம் குரங்குப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வாய்ப்பந்தல் போட்டு சொற்சிலம்பம் ஆடிக் கொண்டிருக்கிறோம்.

வயல் இல்லாமல் நெல் விளைவிக்கும் இவ்வீண் முயற்சியால் கிறிஸ்தவத்துக்கோ, கிறிஸ்தவர்களுக்கோ எவ்வித நற்பயனும் விளைவதில்லை. மாறாக கிறிஸ்தவத்தையும் கிறிஸ்தவர்களையும் புறமதஸ்தர்கள் குறைவாக மதிப்பிடுவதற்கும் எள்ளி நகையாடுவதற்கும் இது வாய்ப்பு அளிக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது.

முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தைப்பற்றியும் கிறிஸ்தவர்களைப்பற்றியும் மக்கள் மத்தியில் இருந்த மரியாதைக்கும், தற்காலத்தில் இருக்கிற நிலைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. தற்காலத்தில் மக்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக மாறி விட்டார்கள் என்றோ, சுவிஷேசத்தின் வலிமை குறைந்து விட்டது என்றோ சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாது. பின் என்ன காரணம்? கிறிஸ்தவத்தைப் பின்பற்றுபவர்களிடையே காணப்படுகின்ற ஒழுங்கற்ற போக்கு, சுய நலம், மூட நம்பிக்கை பிரிவினைப்போக்கு மாய்மாலம் ஆகிய இழிகுணங்களே காரணம் என்பதைச் சிந்திக்க விரும்புகிற எவரும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

இந்த அவல நிலைக்குப் பொறுப்பேற்கவேண்டிய முதல் குற்றவாளிகள் சபைகளைக் கண்காணிக்கிறவர்களும், அவைகளை நடத்துபவர்களுமே. ஏனெனில் சத்தியத்தை அவர்கள் அறிந்திருந்தும் தாங்களே அதைச் செய்யாமலும் மற்றவர்களுக்குப் போதியாமலும், கண்ஜாடையாக இருந்து வருகிறார்கள். சத்தியத்தைச் சொன்னால் சத்துருவாக வேண்டி வரும். பின்னர் நம்முடைய பலவீனங்களை, குறைகளைப் பெரிதுபடுத்திச் சபையிலே குழப்பம் விளைவிப்பார்கள் என்ற அச்சம் தேவனுடைய பூரண ஆலோசனைகளைச் சொல்ல விடாமல் செய்து விடுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் தேவனால் வரும் மகிமையைப் பார்க்கிலும், மனுஷரால் வரும் மகிமையை அதிகமாக விரும்புகிறார்கள். யோவா 12 : 43.

''மனிதருக்கும் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியம் செய்கிறார்கள்'' எபேசி. 6 : 6. 'அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்' ரோமர் 15 : 18 என்றெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பலவிதமாக இடித்துரைத்தும் கூட நமது நிலைகளை மறுபரிசீலனை செய்யத் தொடர்ந்து மறுத்து வருகிறோம்.

அடுத்தபடியாக தேவ ஊழியர்களில் பெரும்பாலோருடைய சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. சொல்வினையும் செய் வினையும் வேறுபட்டால் கண்ணால் கண்டதைச் செய்வார்களே ஒழிய காதால் கேட்டதை எண்ணார்கள் என்று வீரமாமுனிவர் எழுதுகிறார். நாம் பிரசங்கிக்கிறபடி வாழ்ந்து காட்டுகிறோமா? இல்லையே! பெரும்பான்மையான மக்களுக்கு வேத புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்புக் குறைவு. ஆனால் அதைக் குறித்துப் பிரசங்கிக்கிற நம்மை கவனித்து நோக்குகிறார்கள். நாம் தான் அவர்களுக்கு வேத புத்தகம். 'நான் கிறிஸ்துவைப் பின் பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின் பற்றுங்கள்' என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப்போல் நீங்களும் நானும் கூறத் தைரியமுண்டா? 1 கொரி 11 : 1.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை மேற்கொண்டவர்களில் தலை சிறந்தவராகக் கருதப்படுவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் வெற்றிக்கு அஸ்திவாரம் அவரது சொல்லும் செயலும் ஒன்றாக இருந்ததுதான் என்று துணிந்து கூறலாம். அவர் எதை நம்பினாரோ அதையே சொன்னார். எதைச் சொன்னாரோ அதையே செய்தார். அவரிடத்தில் துளியும் மாய்மாலம் இருந்ததில்லை. மற்றவர்கள் மெச்ச வேண்டுமென்று காரியங்கள் செய்ததுமில்லை. சிறைச்சாலையிலிருந்து பிலிப்பியருக்கு. ''சந்தோஷமாயிருங்கள். ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என்று'' எழுதினார். பிலி. 4 : 4, 6. இதைக்கேட்பவர்களுக்கு இலேசில் நம்பிக்கை வராது. ஆனால் தன்னுடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் பட்டணங்கள் தோறும் பரிசுத்த ஆவியானவர் பவுலாருக்கு ஏற்படவிருக்கும் கட்டுகளைப்பற்றியும், உபத்திரவங்களைப் பற்றியும் எச்சரித்துக்கொண்டே வருகிறார். அந்த நிலையிலும் ''நான் ஒன்றைக் குறித்தும் கவலைப்படேன்'' என்று உரைக்கிறார். அப் 20 : 23, 24. சொல்வது சுலபம், செய்வது கடினம் என்பார்கள். ஆனால் பவுலார் இதற்கு விதிவிலக்கு. அவருடைய போதனையும் சாதனையும் ஒன்றுதான். உயிரைப் பணயம் வைத்து ஊழியம் செய்த வகையில் மட்டும் அல்ல, வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அதே கொள்கைகளைச் சுத்த நல் மனச் சாட்சியோடே கடைப்பிடித்தார்.

ஐசுவரியத்தின் அபாயத்தையும், பண ஆசையின் தீமையையும் குறித்து தீமோத்தேயுக்கு அறிவுரை கூறும்போது ''போதும் என்ற

மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்'' என்றார் 1 தீமோ 6 : 6. அதே போல சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்ட நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இருந்து கொண்டு ''எல்லாவற்றிலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன்'' என்று இயம்புகிறார். பிலி. 4 : 12. 'தேவ ஊழியக்காரன் இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும் பண ஆசையில்லாதவனுமாயிருக்க வேண்டும்'' என்று சட்டம் வகுத்தார் 1 தீமோ 3 : 3 அதை அவரே முழு மனதோடு கடைப் பிடித்தார். ''ஒருவனுடைய வெள்ளியை-யாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்க வில்லை என்று எபேசு பட்டணத்து மூப்பர்கள் முன்பு தன்னிலை விளக்கம் கொடுக்கிறார். அப். 20 : 33.

சகோதரனே! நானும் நீயும் பிரசங்கிக்கிறவைகளைக் கடை பிடிக்க முடிகிறதா? அப்போஸ்தலனுடைய ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட மகத்தான வெற்றிக்குக் காரணம் புரிந்து விட்டதா? பவுல் அப்போஸ்தலன் காலம் வேறு; இன்றைய சூழ்நிலை வேறு என்றெல்லாம் மழுப்பி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. பவுல்—அப்போஸ்தலன் காலத்தில் இருந்த எந்த சூழ்நிலையும் இன்றைக்கு உள்ள நிலையைவிட சிலாக்கியமானதாக இருக்கவில்லை. அல்லது அவர் ஒன்றும் தெய்வப் பிறவி இல்லை. பரிபூரணத்தை நோக்கி வாஞ்சையோடு தொடர்ந்து போராடித் தான் அந்த உன்னத நிலையை அடைந்தார். ரோமருக்கு எழுதின நிருபத்தின் ஏழாம் அதிகாரம் 14-ம் வசனத்-திலிருந்து 24-ம் வசனம் வரையில் உள்ள வசனங்களில் அவருடைய மனப் போராட்டத்தைச் சித்தரிக்கிறார். கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தின் ஒன்பதாம் அதிகாரம் 27-ம் வசனத்தில் தன்னுடைய சரீரத்தை ஒடுக்கி தான் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாக கடும் பிரயாசை எடுத்துக்கொள்வதுபற்றி விவரிக்கிறார். பிலிப்பியருக்கு எழுதும்போது "ஒன்று செய்கிறேன். பின்னானவை-களை மறந்து முன்னானவைகளை நாடி பந்தயப் பொருளாகிய இலக்கை நோக்கித் தொடர்கிறேன்.'' பிலி 3:14, என்று தான் நடந்துவந்த பாதையில் ஏற்பட்ட தவறுகளைப்பற்றி எண்ணிப்பார்த்து "நடந்த-வைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவை-களாக இருக்கட்டும்'' என்று இனிமேல் தவறு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு இருக்காது என்ற நிலை எய்துகிறார். இறுதியாகத் தனது கடைசி நிருபமாகிய தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாம் நிருபத்-தின் நான்காம் அதிகாரம் 7, 8-ம் வசனத்தில் தன் இரட்சிப்பின் நிச்சயத்தை உறுதிப் படுத்துகிறார். ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்'' என்கிறார்.

இதை வாசிக்கிற என்து உடன் ஊழியனே இன்றைக்கு இருக்கும் எவ்விதமான வசதியும் இல்லாத அந்த நாளில் பனிரெண்டுக்கும்

குன்றவான அப்போஸ்தலர்கள் சுமார் ஐம்பது ஆண்டுகால இடை-வெளிக்குள் ரோமைப் பேரரசின் எல்லா இடங்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல முடிந்தது. ஆனால் எனக்கும் உனக்கும் 300 ஆண்டுகள் ஆகியும் விஞ்ஞானயுகத்தின் சகலசௌகரியங்களையும் கைவசம் வைத்துக் கொண்டு இந்திய நாட்டின் மக்கள் தொகையின் மூன்று விழுக்காடு மக்களைக்கூடக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வர முடியவில்லை. சிந்திப்-போம், செயல்படுவோம். நம்முடைய வாழ்க்கையை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்போம். அவர்தம் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடப்போம். **“கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை எவன் நமக்காகப் புரட்டித் தள்ளுவான்?”** *மாற் 16:3.* என்று திகையாதே. நீ புறப்பட்டுப் போ. இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களு-டனே இருக்கிறேன் என்றவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்.

**E. Z. செல்வநாயகம்**

**தேவன் நம்முடைய ஜெபத்தை ஏன் கேட்பதில்லை?**

(அ) தேவனுடைய அழைப்பை நாம் கவனிப்பதில்லை.

(ஆ) அவருடைய அன்பை உணர்வதில்லை. அவர் நேசக் கரம் நீட்டி பாசம் காட்டும் போது அசட்டை செய்-கிறோம்.

(இ) அவருடைய ஆலோசனைகளை உதாசீனம் செய்கிறோம்.

(ஈ) அவருடைய கடிந்து கொள்ளுதலை வெறுக்கிறோம்.

(உ) மாமிசமும் மனமும் யாசிக்கிற கீழ்த்தரமான விருப்பங்களை நிறைவேற்ற விரும்பி அவருடைய சித்தத்துக்கு முரண்-பாடானவைகளைக் கேட்கிறோம்.

**விலை மாதின் வலை விரிப்பில் நெளிகின்ற நச்சுத் தன்மை.**

அவள் உதடு தேன் கூடு போல் ஒழுகும். அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாய் இருக்கும். அவள் செய்கையின் முடிவு எட்டியைப் போல் கசப்பு; இருபுறமும் இருக்குள்ள பட்டயம் போல் கூர்மை. அவள் காலடிகள் மரண தூதன். நீ அவள் மயக்க வலையில் இருந்து விடுபட்டு விடாதபடி அவள் நடைகள் பாதா-ளத்தை நோக்கி சுழன்று சுழன்று போகும்.

# திரும்பிச் செல்வோம் வாரீர்!

''முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்கு
**கிறிஸ்தவர்கள்** என்கிற பேர் வழங்கிற்று''

—அப்போஸ்தர் நடபடி 11:26

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சிறந்த வீட்டு பராமரிப்பு, என்ற அமெரிக்க நாட்டு பத்திரிகை, ''அமெரிக்காவில் மதம்'' என்னும் தலைப்பில் 16 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. வித்தியாசமான வினோதமான, மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் உருவாகிய, சிறிதும் பெரிதுமான 1200 பிரிவுகள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக் கூறுவதாக அக்கட்டுரை தெரிவித்தது.

மாறுபாடான பல போதனைகளை இன்று கேட்டு வரும் மக்கள் எதை நம்புவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த சபை சரியானது, அல்லது எல்லா சபைகளுமே ஒன்று தானா? நான் எந்த சபையில் அங்கம் வகிக்கவேண்டும்? . . . . என்ற வினாக்கள் எழுகின்றன. காளான்களைப் போல, பிரிவினை சபைகள் பெருகி பலுக்கி கிடக்கின்ற காரணத்தால் பலர் கிறிஸ்தவத்தையே வெறுத்து ஒதுங்கி விடுகின்றனர். அல்லது ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கிறிஸ்தவத்தின் வல்லமையும், உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு அதன் அவசியமும் இன்றைய பிரிவினை சபைகளின் தோற்றத்தால் கவலைக் கிடமான நிலையில் மறைந்து மங்கி வருகின்றன. இந்த பிரிவினைகளின் விலையோ மிக மிக அதிகம். பொறாமை, சந்தேகப்பார்வை, பிரிவு-களுக்கிடையே பரஸ்பர வெறுப்பு. இவற்றிற்கெல்லாம் மேலாக, பிரிவினை சபைகளின் குழப்பமான போதனைகள் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்துவின் அருகில் வரவிடாமல் ஓட வைத்துள்ளன.

இந்த நிலை, இதுவரை பலர் கேட்டிராத கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது. இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையில் மட்டுமே நாம் அங்கம் வகிக்க முடியாதா? அதாவது, பிரிவினை சபைகளின் பாரம்பரிய கொள்கைகளில் சிக்கித் தவிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டுமே பின்பற்றிச் செல்வ இயலாதா? பெயருக்கு மட்டும் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளுவது தேவையா? பிரிவினையற்ற கிறிஸ்தவம் அடைய முடியாத ஒன்றா? அல்லது, கிறிஸ்துவின் ஒரே சபை நடை-முறைக்கு வராத கனவா? என்பவைகள் அவைகளில் சில.

மத உலகிலே இன்று நிலைத்துள்ள பிரிவினை சபைகளின் வரலாறுகளை, சிறிது பின் நோக்கி பார்க்க வேண்டிய தருணம் இதோ வந்து விட்டது. இந்த சபைகள் எல்லாம் எங்கிருந்து, எப்-பொழுது யாரால் ஏன் வந்தன? இவ்வளவு மோசமாக நாம் பிரிந்து

கிடைப்பது எப்படி? தேவனுக்கு இந்நிலை மகிழ்ச்சி தரக் கூடியதா? புற மதஸ்தர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? கிறிஸ்துவை பின் பற்றுவோர் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே சபையாக இயங்க வழியே கிடையாதா? எல்லாவற்றிற்கும் மேலாக தொழுதிட, பிரிவினை லேபிள் எதுவும் இல்லாத ''கிறிஸ்தவனாக'' மட்டுமே இருப்பது எப்படி? இக் கேள்விகளுக்கெல்லாம் இங்கு விடை காணப் போகிறோம்.

**புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது.**

புதிய ஏற்பாட்டு நிலை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 4: 4-6 வசனங்களில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

'உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே **சரீரமும்**, ஒரே ஆவியும் உண்டு ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும் உங்கள்எல்லோருக்குள்ளும் இருக்கிறவர்.'

ஒரே சரீரம் என பவுல் இங்கு குறிப்பிடுவது சபையை நினைவில் கொண்டு தான் என்பதை, அடுத்து எபேசியருக்கு எழுதிய நிருபம் 1:22-23 வசனங்களில் காணலாம் அதாவது.

''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய **சரீரமான சபைக்கு** அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' அந்த சரீரமாகிய ஒரே சபையில் அங்கத்தினர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கப்பட்டனர். என்பதை அப்போஸ்தலர் நடபடி 11: 26 ம் வசனத்தில் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் விருப்பம், எல்லா மக்களும் ஒன்று பட்டிருக்க வேண்டும் என்பதே. தன்னுடைய சபையைக் கட்டுவதாக அவர் கூறிய போது, ஒரே சபையைத் தான் கூறினார். மத்தேயு 16; 18ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சபையை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மேலும், இயேசு கிறிஸ்து சபையை தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்துக் கொண்டார் என அப்போஸ்தலர் நடபடி 20:28-ல் கூறப்பட்டுள்ளது. மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் என எபேசியர் 5:26,27 வசனங்களில் காணலாம். பவுல் ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு எழுதுகிறபொழுது 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்' என ரோமர் 16:16 ல் கூறியுள்ளார். எனவே கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார் அது **கிறிஸ்துவின்சபை** என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அவருடைய சீடர்களின் ஒற்றுமைக்காகவும், அவருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கும்,

படியாகவும் இயேசு கெத்செமனே தோட்டத்தில் மனதுருகி ஜெபித்-தார். யோவான் 17:20, 21 ம் வசனங்களைப் பாருங்கள்: ''அவர்க-ளெல்லோரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் "என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும், வேண்டிக்கொள்ளுகிறேன்'' என ஜெபித்தார். எபேசியர் 2:13-16 வசனங்களிலும் ஒரே சரீரமாகிய சபையைப் பற்றி பவுல் குறிப்பிடு-கிறார்.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதிய-எல்லோருமே, பிரிவினையை கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர். 1 கொரிந்தியர் 1:10 ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். ''சகோதரர்களே, நீங்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்-கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து-வின் நாமத்தினாலே, உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்,'' கலாத்தியர் 5: 20-ம் வசனத்தில், பிரிவினையானது மாம்சத்தின் கிரியை என தேவனின் வார்த்தை கண்டிக்கிறது. 2 பேதுரு 2:1 ம் வசனத்தில், கேட்டுக் கேதுவான வேதப் புரட்டுகளை, தந்திரமாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளும் கள்ள தீர்க்கதரிசிகளைத் பற்றி குறிப்பிடுகிறார்.

1. புதிய ஏற்பாட்டின்படி, சபை ஒன்றே என்பது தெளிவாகத் தெரிவதால் எல்லா பிரிவினை சபைகளும் கண்டிக்கத்தக்கவை.

2. எல்லா 'சபைகளும் ஒன்றே'' என்ற கூற்று தவறானது.

3. ''விருப்பமான ஏதாவது ஒரு சபைக்குப் போகலாம்'' என ஒருவர் சொல்வது, ஒன்று தவறான போதனையின் விளைவாக இருக்கலாம் அல்லது அவர் தேவனின் விருப்பத்தைப்பற்றி சிறி-தும் கவலையற்ற நபராக இருக்கலாம்.

4. உண்மையான சபை ஒன்றே என்பது உறுதியான பின், மற்ற சபைப் பிரிவுகள் எல்லாம் போலிகள் என்பது சிந்திக்க விரும்பு-கிற ஒருவருக்கு விளங்காமற் போகாது.

5. புதிய ஏற்பாட்டு சபை ஒன்றே என்பதால், இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரம் உள்ள எல்லோரும் அதில் தானே அங்கம் வகிக்க வேண்டும்?

எவ்வித விரோத மனப்பான்மையோ, அல்லது வெறுப்பு உணர்வோ இன்றி, உங்கள் பேரில் அன்பும் அக்கரையும் கொண்டு, புதிய ஏற்பாட்-டில் காணப்படும் சபையைப் பற்றி நான் கூறுவதை, தயவுசெய்து

வேதகாமத்துடன் ஒத்துப் பார்த்து சரியாக இருப்பின் ஏற்றுக்கொள்ளுங்கள், அப் 17:11, அது பிரிவினையற்ற கிறிஸ்துவை நடு நாயகராகக் கொண்ட தேவனின் அநாதித் தீர்மானங்களின் நிறைவேற்றலாக ஒரே சிந்தையாய் ஆணும் பெண்ணும் சகோதரத்துவ பாசத்தில் இணைந்த ஒரு அற்புதமான தெய்வீக அமைப்பு என்பதை நீங்கள் காண முடியும்

**பிரிவினை சபைகள் வளர்ந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?**

இன்றைய மதப்பிரிவினைகள் வேர் விட்டு வளரத் தொடங்கிய காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் **பெரும் வீழ்ச்சியின் காலம்**, அல்லது **இருண்ட காலம்** என குறிப்பிடுகின்றார். புதிய ஏற்பாட்டு காலத்திலேயே, சபையை துண்டாட சிலர் முயன்றனர். இதை பவுல் வன்மையாகக் கண்டித்து உணர்த்தினர். (1 கொரி 1 : 10-17), அப்போஸ்தலர்களும், பரிசுத்த ஆவியினுல் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், இதை கண்டித்துள்ளனர். கலாத்தியர் 1 : 6—9 வசனங்களிலும், 2 பேதும் 2 : 1 ம் வசனத்திலும் எச்சரித்துள்ளனர். 2 தீமோத்தேயு 2 : 18-ம் வசன இறுதியில், அப்போஸ்தலர் பவுல் மீண்டுமாக எச்சரிக்கிறார்.

" ........இவர்கள் உண்மையைவிட்டு விலகி சிலருடைய விசுவாசத்தையே தகர்த்து விடுகிறார்கள். தொடர்ந்து 2 தீமோத்தேயு 4 : 3, 4 வசனங்களில் கூறுகிறார். "ஒரு காலம் வரும், அப்போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்க மாட்டார்கள், மாறாக செவித் தினவு கொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர். உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து, கட்டுக் கதைகளுக்கு செவி கொடுப்பர்". (திருத்திய மொழி பெயர்ப்பு)

எபேசுவிலுள்ள புதிய ஏற்பாட்டு சபையை எச்சரித்து, அப்போஸ்தலர் நடபடி 20 : 20—30 வசனங்களில் பவுல் கூறுகிறார். "நான் போனபின்பு மந்தையை தப்பிவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீடர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்".

மாறுபாடான போதனைகளும், வீழ்ச்சியும், பவுல் கூறியவாறு, கி. பி. 100 முதல் 300 வரையிலான கால கட்டத்தில் தோன்றி, புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை சிறிது சிறிதாக மங்கச் செய்து விட்டன. மாறுபாடான போதனைகள் தந்திரமாக ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்தப்பட்டு வந்தன.

1. புதிய ஏற்பாட்டுக் கால எளிய சுதந்திரமான, சபை **நிர்வாகமுறை** கொஞ்சம் கொஞ்சமாக, பிஷப், ஆர்ச்பிஷப், என்றும் கடைசியாக

7-வது நூற்றாண்டு துவக்கமுதல் ''போப்'' என்று மனிதனால் உருவாக்கிய பதவிகளால் மாற்றப்பட்டு இறுதியில் பறித்துக் கொள்ளப்பட்டன.

2. மனிதனுடைய பாரம்பரியங்கள், தேவனின் வார்த்தைக்கு மேலாக மதிக்கப்பட்டு, மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டன.

3. புதிய ஏற்பாட்டு சபையின் எளிய வழிபாட்டு முறைகள் மாற்றப்பட்டு, மனிதன் ஏற்படுத்திய சடங்குகளுடன் இலத்தீன் மொழியில் பூசை (MASS), என்ற பெயரில் விக்கிரகங்களை வணங்குதல், ஆராதனையில் வாத்தியஇசைக்கருவிகள் போன்றவைகள்இடம் பெற்றன.

4. ஜென்ம பாவம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற புதுமுறை புகுத்தப்பட்டு தண்ணீரைத் தெளித்து, சபை அங்கத்தினர்களாக்கும் முறையில் தவறான மாற்றம் செய்யப்பட்டது.

5, போதகர்கள் தங்களை ''சங்கைக்குறிய'' அதி சங்கைக்குறிய'' என்றெல்லாம் அடைமொழிகளை சேர்த்து பெருமையுடன் அழைத்துக் கொண்டதுடன், சபை அங்கத்தினர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக்காட்டும் ஆடைகளையும் அணிந்து கொண்டனர்.

படிப்படியாக நடைபெற்றுவந்த இந்த மாபெரும் வீழ்ச்சியை ஆண்டுவாரியாகக் கீழே காணலாம்.

கி. பி. 150-ல் தலைமை பிஷப் தோன்றினார்;
கி. பி. 251-ல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் அறிமுகம்;
கி. பி. 405-ல் விக்கிர வழிபாடு புகுத்தபட்டது;
கி. பி. 607-ல் முதல் போப்உருவாக்கப்பட்டார்.
அதாவது, ரோமன் கத்தோலிக்க மதம் தோன்றியது. அவர்கள் முதலாம் நூற்றாண்டில் மரித்த, இராயப்பர் என கத்தோலிக்கர்களால் அழைக்கப்படும் பேதுருவை, முதலாவது போப் என சொல்வது எவ்வளவு பெரிய சரித்திர மோசடி என்பதைக் காணலாம். 'போப்' திருமணம் செய்து கொள்வது கூடாது என்று போதிக்கும் இவர்கள், திருமணமாகி குடும்பம் நடத்திய பேதுருவை ''முதலாவது போப்'' என்று கூறிக் கொள்வது எப்படி? (மத் 8:14, மாற்கு1-30 லூக் 4:38; 1 கொரி9:5)

கி. பி. 666-ல் ஆராதனையில் வாத்தியக் கருவிகளை அறிமுகம் செய்தனர்;

6. கி. பி. 800-ல் சபையும் (அதாவது கத்தோலிக்க சபையும்) அரசும் இணைந்து வேதத்துக்குப் புறம்பாக செயல்பட்டன. மதத்தின் பெயரால் இவர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியையும் செய்த பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தி, புதிய ஏற்பாட்டுநடைமுறைகளுக்குத் திரும்பும் அவசியம் பற்றி மக்கள் மன்றத்தில் தைரியமாக எடுத்துரைத்த பலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

7. கி. பி. 1054-ல் கிரீக். ரோமன் சபைகள் என்று கத்தோலிக் மார்க்கத்தார்களிடையே பிளவு ஏற்பட்டு பிரிந்தனர்.

அடுத்து வந்த நூற்றுண்டுகளில் மேலும் பிரிவுகள் ஏற்பட்டு, மாறுபாடான வழிபாட்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்து, உலக காரியங்களும் ஊழல்களும் மலிந்த மத அமைப்புகள் தோன்றலாயின.

சாத்தான் தனது (தற்காலிக) வெற்றியைக் கண்டு குதித்து கூத்தாடி இருப்பான்.

16-ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன கேடுகளைக் களைந்தெரிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கு மீண்டும் செல்ல **ஜான்வைகிளிப், ஜான்ஹஸ், ஜெரோம்** போன்றோர் கிளர்ந்தெழுந்தனர். மதமும், அரசும் இணைந்து வலிமை மிக்க சக்தியாக இயங்கிய அந்த காலகட்டத்தில், ''ஆதி சபையின் ஒழுங்குகளிலிருந்து பிரிந்து எங்கோ வந்துவிட்ட நாம், மீண்டுமாக திரும்பிச் செல்லுவோம்'' எனக் குரல் எழுப்பி அறைகூவல் விட்ட, மேற்சொன்ன கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர்கள், அந்தோ! தங்கள் உயிரையே இழக்கவேண்டி வந்தது.

பிற்காலத்தில் தோன்றிய **மார்ட்டின் லூதர்**, ''மதத் தலைவர்களின் தடைகள் இன்றி, எல்லோரும் பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, அதன்வழி நடக்கவேண்டும்'' என்று வற்புறுத்தினர்.

அவரைத் தொடர்ந்து பல நூற்றுண்டுகளாக, மாறுபாடான, மனிதக் கோட்பாடுகளால் அமுங்கிக் கிடந்த புதிய ஏற்பாட்டுச் சபைக்கு, மீண்டுமாக உயிர்கொடுக்க ஒரு இயக்கம் தோன்றிற்று. இவ்வியக்கத்தில் **உல்ரிச் ஸ்விங்லி ஜான்கால்வின், ஜான்நாக்ஸ்** போன்றோர் தீவிரப் பங்கேற்றனர். இவர்களுக்குப் பின் தோன்றிய **ஜான்வெஸ்லி**, மனிதர்கள் கடைப்பிடித்து வந்த உயிரற்ற சடங்குகளை மாற்றி, புதிய ஏற்பாட்டு சபைக்கு உயிரூட்ட முயன்றார்.

இவர்கள் எல்லோருமே மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள். நாம் இவர்களுக்கு மிகவும் கடன்பட்டுள்ளோம். இருண்ட காலத்தில் ஒளியேற்ற பாடுபட்ட இவர்களை நாம் வாழ்த்துகிறோம்! ஆனால் பரி-

தாபம்! காலத்தின் கட்டாயத்தாலும் சூழ்நிலையாலும் இதற்கு மேல் இவர்களால் செல்ல முடியவில்லை. காலப்போக்கில் மீண்டும் புதிய புதிய மனித சபை பிரிவுகள் உருவாக இந்த நல்ல மனிதர்களின் பெயர்களே பயன் படுத்தப்பட்டன. என்பதுதான் வேதனையைத் தருகிறது. இவர்களில் எவருமே புதிய பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் இயங்க வில்லை. பிரிவினை சபைக்கு உதவும் எண்ணமும் இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. ஆனுல் துரதிஷ்டமாக இவர்களுடைய மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறதாக நினைத்துக் கொண்டு இவர்களுடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு விட்டு, மேலே குறிப்பிட்ட மனிதர்களை பின்பற்றலாயினர். இப்படியாக புதுப் புது பிரிவு சபைகள் தோன்றலாயின. **மார்ட்டின்லூதரைப்** பின்பற்றியவர்கள் **லூதரன் சபை** என்றும், **கால்வின்** கருத்துக்களால் கவரப்பட்டவர்கள் **பாப்டிஸ்ட் சபை** என்றும், **ஜான் நாகஸ்** வழியாக **பிரஸ் பிடேரியன் சபையும்**, **ஜான் வெஸ்லியின்** ஆதரவாளர்கள் **மெதடிஸ்ட் சபை** எனவும், இங்கிலாந்து நாட்டில், இவ்வியக்கம் **ஆங்கில சபை** என்றும் பல பிரிவுகளாக உருவாயின.

காலம் செல்லச் செல்ல இப்பிரிவுகளில் உட்பிரிவுகள் பல முளைத்து அவைகளிலும் பிளவுகள் ஏற்பட்டு, இன்றைய தினம் அமெரிக்காவில் மட்டும் 1200 பிரிவுகள் உள்ளன இந்தியாவிலும், உலகமெங்கிலும் எண்ணிலடங்கா பிரிவு (அல்லது பிளவு) சபைகள் உள்ளன. இவ்வாறுக ஆதிசபையை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஸ்தம்பித்துப் போனது மட்டுமில்லாமல் கிறிஸ்துவம் பல கூறுகளாக சிதைந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் முரண்பாடாகச் செயல்பட ஆரம்பித்தன. சாத்தான் மீண்டுமாக தன் எக்காளச் சிரிப்பிரில் மிதந்திருப்பான்.

மனிதனுல் தோற்றுவிக்கப்பட்ட சபை பிரிவுகளுக்கிடையே வெடித்த பொறுமை, வெறுப்பு, அடிதடி, சட்டப் பிரசனைகளின் விளைவாகத் தோன்றிய ஏமாற்றத்தின் உச்ச கட்டத்தில், கடந்த நூற்றுண்டின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று.

சபை பிரிவுகளை ஒழித்துக் கட்டும் மார்க்கம், என்பது மீண்டும் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்துவது அல்ல என்றும் மாறுக, மனிதரால் உருவாக்கப்பட்டு, சபைகள் என்ற பெயரில் இயங்கும் அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்புவது தான் ஒரே சரியான வழி என இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டு, **முதலாம் நூற்றுண்டு புதிய ஏற்பாட்டு சபையின்** சகல மகிமைகளையும், பூரணமான பரிசுத்தத்தையும் மீண்டும் கொண்டு வரப் பாடுபட்டனர். இவ்வியக்கம் எல்லைப் பகுதிகளான விர்ஜீனியா, கெண்டுக்கி, ஓகியோ, பென்ஸில் வேனியா போன்ற இடங்களில் விரைவாகப் பரவிற்று.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அதாவது, **கிறிஸ்துவின் சபையை** மீண்டும் ஏற்படுத்தும் பணியில், பல பிரிவு சபைகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் பிரிவுகளை உதறிவிட்டு, உற்சாகமாகப் பங்கேற்றனர்.

இதுவரை ஆணவச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்த நமது "நண்பன்" சாத்தான் இவ்வியக்கத்தின் வலிமைகண்டு தொடை நடுங்கிப் போயிருப்பான்.

வட கரோலினாவில், **மெதடிஸ்ட்** சபையின் புகழ்பெற்ற ஊழியராய் இருந்த **ஜேம்ஸ் ஓ கெல்லி** என்பவர், 1793-ல் மெதடிஸ்ட் சபையை உதறி தள்ளிவிட்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைக் கொண்டுவர உழைத்தார். இவருடைய முயற்சியால் 5000 பேருக்கும் அதிகமான சகோதரர்கள் தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கவும், **புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களை** மட்டுமே தங்கள் சபையில் சட்ட திட்டமாகவும் ஏற்றுக்கொண்டனர்.

1801-ம் ஆண்டு துவக்கத்தில், புதிய இங்கிலாந்தில் **எலியாஸ்மித், அப்னர் ஜோன்ஸ்** என்ற இரு பாப்டிஸ்ட் போதகர்கள் தங்கள் பிரிவினை சபையை உதறிவிட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்காக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கென்டுக்கி மாநிலத்தில், **பார்ட்டன் ஸ்டோன்** என்ற பிரஸ்பிட்டேரியன் போதகர், அதே சபையைச் சார்ந்த மற்றும் சில போதகர்களுடன் இணைந்து **ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையை விட்டு வெளியேறி, "வேதாகமத்தைத் தவிர வேறு மனித சட்ட திட்டங்களோ, அல்லது கிறிஸ்தவன் என்ற பெயரைத் தவிர வேறு எந்த பெயருமோ நமக்குக் கூடாது" என அறிவித்து, புதிய ஏற்பாட்டு சபையை மீண்டும் கொண்டுவரும் பணியில் தங்களை அர்ப்பணித்தார்கள்.

**ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிடேரியன்** சபையின் கடைசி உயில் என அவர்கள் வெளியிட்ட ஒரு பிரபலமான தஸ்தாவேஜு அறிவிப்பதைக் கேளுங்கள்.

"இந்த சபை (ஸ்பிரிங்பீல்டு பிரஸ் பிட்டேரியன்) மடிந்துபோகவும், கலைக்கப்பட்டு. கிறிஸ்துவின் சபையிலே இணையவும் நாங்கள் தீர்மானிக்கிறோம். ஏனென்றால், நாம் ஒரே நம்பிக்கையில் அழைக்கப்பட்டிருப்பது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும்தான் உண்டு. மோட்சம் செல்ல, தங்களின் ஒரே மார்க்கமாக மக்கள் இனி கிறிஸ்துவின் நற்செய்தியை (பைபிளை) மட்டுமே. ஏற்றுக்கொள்ள நாங்கள் தீர்மானிக்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்திக்குப் போட்டியாக முளைத்த, இதர எல்லா மனித சட்டதிட்டங்களையும், விரும்பினால், தீயிலிட்டுக்

கொளுத்துவோம். மனிதன் இயற்றிய பல மதச்சட்டங்களும், சட்ட புத்தகங்கள் வழியாக நரகத்திற்கு செல்வதை விட்டு, ஒரே வேதாகமத்தை மட்டும் நமது இரட்சிப்புக்கு ஏற்றுக்கொள்வோம்''

இவ்வெழுச்சி காரணமாக விரைவிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் மனித சபை பிரிவுகளை உதறிவிட்டு, **பார்ட்டன் ஸ்டோன்** அவர்களைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தில் வெகு முக்கியமான நபர்கள் **தாமஸ் கேம்பல், அலெக்சாண்டர் கேம்பல்** ஆகிய இருவர். இவர்கள் தகப்பனும் மகனும் ஆவர். அயர்லாந்து நாட்டிலிருந்து இவர்கள் 1807, 1809-ம் ஆண்டுகளில் குடிபெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்தனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப்பகுதி மிகப் பிரசித்திபெற்ற ஒன்றாகும். அதாவது: **''பைபிள் எதைப் பேசுகிறதோ அதை மட்டுமே பேசுவோம்; அது பேசாத எதையும் நாம் பேசமாட்டோம்.''**

பிரஸ்பிட்டேரியன் சபை, பின்னர் பாப்டிஸ்ட் சபைகளில் அங்கம் வகித்த இவ்விருவரும், சத்தியத்தை தேடி உணர்ந்தபின், மேற்சொன்ன சபைப்பிரிவுகளை உதறி தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் ஒரே சபையாகிய புதிய ஏற்பாட்டு சபையில் தங்களை இணைத்துக்கொண்டனர் பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்களைப் பின்பற்றி, கிறிஸ்துவின் சபையில் இணைய இவர்கள் காரணமாக இருந்தனர்

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், பல இடங்களிலும் தோன்றிய இந்த மறுமலர்ச்சி இயக்கம் 1832-ம் ஆண்டு துவக்கத்தில் ஒருங்கிணைந்து, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்பும் இயக்கமாக செயல்பட்டது

1. ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்'' என 1 பேதுரு 4 : 11ம் வசனத்தில் கூறியபடி, கிறிஸ்துவில் நம்பிக்கையுடைய எல்லோரின் ஒற்றுமையை வலியுறுத்தினர்.

2. வேதாகமத்தை மட்டுமே சபையின் சட்ட புத்தகமாக வைத்துக் கொண்டு, மனிதன் உருவாக்கிய சகல சபை சட்டதிட்டங்களையும் புறக்கணித்தனர்.

3. வேதாகமத்தில் குறிப்பிட்ட பெயர்களை மட்டுமே சபைக்கு உபயோகித்து, உண்மை கிறிஸ்தவர்களாக செயல்பட உறுதி பூண்டனர்.

4. புதிய ஏற்பாட்டு சபையில் நடைமுறையிலிருந்த வழிபாட்டு முறைக்குத்திரும்பினர்.

புதிய ஏற்பாட்டு சபையில் தொடர்ந்த ஒரு ஒழுங்கு இருந்ததை ஏற்றுக்கொண்டு, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்துக்கு திரும்புவதில் கவனத்தையும் ஒழுங்கையும் கடைபிடித்தனர்.

**முன்னேற ஒரே வழி, பின்னே செல்வதுதான்;** அதாவது ஆதி சபையைப்போல இருப்பதுதான் என அவர்கள் நம்பினார்கள்.

இன்று நாம் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். வேதாகமத்தை மட்டுமே மூலமாக எடுத்துக் கொண்டு, சிதறிக்கிடக்கும் பிரிவினைக்கூட்டங்கள் தங்கள் கொள்கைகளை விட்டு, ஒன்றுபட வேண்டுகிறோம். மத பிரிவினை-களை நோக்கி எங்கள் மன்றாட்டு இதோ:

தயவு செய்து உங்கள் நிலையை மறு பரிசீலனை செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை,பழக்க வழக்கங்களைமாற்றி வேதாகமம்,பேசும் இடத்தில் பேசுங்கள்; அது பேசாததை நீங்களும் பேசாதீர்கள்....

**அலெக்சாண்டர் காம்பெல்** அல்லது **பார்ட்டன் ஸ்டோன்** அல்லது **ஜான்வெஸ்லி, மார்ட்டின் லூதர்** அல்லது **கால்வின்** அல்லது எந்த மனிதனையாவது பின்பற்றுங்கள் என நாங்கள் சொல்ல வில்லை. மாறாக. உங்களை வேண்டுவதெல்லாம்: **கிறிஸ்துவிடம் திரும்புங்கள்! அவருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள்! புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புங்கள்!** நமது பழக்கங்களிலும். நம்பிக்கையிலும் நாம் பிரிவினை சபையாக இருக்கக்கூடாது என்பதே எங்கள் ஜெபம்!

இது ஒன்று மட்டுமேதான் மத உலகில் ஒற்றுமைக்கான வழி. அன்று இது சாத்தியமாயிற்று;அப்படியானால் இன்றும் அது சாத்தியமே.

கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எல்லோரும் ஆதிச் சபைகள் முதலாம் நூற்றாண்டில் நடந்ததைப் போல, கிறிஸ்துவின் வழியில் நடக்கவேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கையும் ஜெபமுமாகும்.

முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ, அதேபோல 20-ம் நூற்றாண்டிலும் நாம் இருக்க முடியும். அவர்கள் நம்பியதை நாம் நம்பினால் அவர்கள் கீழ்ப்படிந்ததைப் போல நாமும் கீழ்ப்படிந்தால், அவர்கள் நடந்ததைப் போல நாமும் நடந்தால், கிறிஸ்துவின் சபையிலே நாம் அங்கம் வகிப்போம்.

நாம் முன்னேற, பின்னோக்கிச் செல்வோம்...... ஆம்! முதல் நூற்றாண்டு **கிறிஸ்துவின் சபையை** நோக்கிச் செல்வோம்.

இயேசு கிறிஸ்து கட்டிய சபை:— **கிறிஸ்துவின் சபை**, அதன் உறுப்பினர்கள் — **கிறிஸ்தவர்கள்** கிறிஸ்தவர்களின் ஒரே முழுமையான சட்ட நூல், எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமான சட்ட நூல் **புதிய ஏற்பாடு.**

[**ராபர்ட் ஜி. டாக்கரி** எழுதிய கட்டுரையைத் தழுவியது]

**எஸ். எஸ். ராஜன்**

# நியாயத் தீர்ப்பும் தேவனுடைய வீட்டாரும்.

யார் ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவர் வழி நடக்க தன்னை ஒப்புக்கொடுக்கிறரோ, அப்பொழுதே அவர் சாத்தானுக்கும், உலகத்துக்கும் விரோதி என்று உறுதியாகிவிட்டது. ''நீங்கள் உலகத்தாரராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது.'' யோவான் 15:19.

தேவனுடைய பிள்ளைகள் சாத்தானின் பகைவர்கள் என்று முடிவாகிவிட்டபடியால் அவர்கள் சாத்தானுடைய தாக்குதலுக்கு ஆளாவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மிகத் தந்திரமாக, ஆனால் கடுமையாக, தொடர்ந்து தருணம் வாய்க்கும்பொழுதெல்லாம் அவர்களைத் தாக்குகிறான். சாத்தான் கிறிஸ்தவர்களைப் பலவீனப்படுத்த, துன்புறுத்த, சோர்வு அடையச் செய்ய, கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தத் தவறுவதில்லை.

ஆதித் திருச்சபையை நிலைகுலையச் செய்ய சாத்தான் பிரயோகித்த போர்முறை ''உபத்திரவப்படுத்துதல்''. இம்முறையைச் சாமர்த்தியமாகக் கையாண்டு பலரை கிறிஸ்துவைப் பின்தொடரவொட்டாமல் பின்வாங்கச் செய்துவிட்டான். இன்றைக்கு சூழ்நிலைகள் சற்று வித்தியாசமாக இருந்தாலும், ஆதித் திருச்சபைக்கு இப்படிப்பட்ட உபத்திரவங்களைத் தாங்கிக்கொள்ளக்கூடிய பொறுமையும், உறுதியான விசுவாசமும் தேவைப்பட்டது.

இப்படி ஆதித் திருச்சபை, சாத்தானல் ஏற்படும் உபத்திரவங்களையும், துன்பங்களையும் சந்திக்க வேண்டியிருந்த காரணத்தினால் அவைகளைக் குறித்து எச்சரித்து, உற்சாகமூட்டுவதற்காக பேதுரு தனது நிருபங்களை எழுதினர். அவருடைய முதலாம் நிருபத்தின் மையக்கருத்தே இதுதான் என்று கூறினாலும் தகும். குறிப்பாக 1 பேதுரு 4:12-19-ல் உபத்திரவத்தைப்பற்றியும் அதைச் சந்திக்கும் முறைகளைப்பற்றியும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். பாடுகளைப் பற்றிக் கூறும் இந்த வசனப் பகுதியின் மத்தியில் நியாயத் தீர்ப்புப் பற்றிய பிரஸ்தாபம் இடம் பெறுகிறது. ''நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்தில் அது துவங்கினால், தேவனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?'' (வ 17) என்பதை வாசிக்கும்போது, உபத்திரவங்களைப்பற்றிச் சொல்லுகிற இந்த வசனப் பகுதியில் தேவனுடைய வீட்டில் துவங்கும் நியாயத் தீர்ப்பைப்பற்றி பிரஸ்தாபிக்க வேண்டிய காரணம் என்ன? என்பது பலருடைய கேள்வி, அந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முயல்வோம்.

நியாயத் தீர்ப்பைப் பற்றி நான்கு வித்தியாசமான கருத்துகள் நிலவுகிறது.

1. "நியாயத் தீர்ப்பு துவங்கும் காலமாயிருக்கிறது" என்று கூறப்படுவதால் பேதுரு இந்த நிருபத்தை எழுதின காலகட்டத்தில் நியாயத் தீர்ப்புத் துவங்கவில்லை என்று பொருள்படுகிறது, இக்கருத்தை ஊர்ஜிதம் செய்ய "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று கூறுகிற இதே அதிகாரம் 7-ம் வசனத்தைப் பார்க்கவும்.

2. நியாயத் தீர்ப்பு துவங்கும்போது முதலாவது தேவனுடைய வீட்டில் துவங்கும். ஆகவே துவங்கும் காலம் ஒன்று உண்டு என்பது நிச்சயம். ஆனால் எப்பொழுது என்பது தெளிவாக்கப்படவில்லை.

3. தற்கால உபத்திரவங்கள் நியாயத் தீர்ப்புக்கு முன்னோடி. அது விவரிக்க முடியாத வேதனை நிறைந்ததாக இருந்தாலும் 'முடிவு' பற்றி தேவனுடைய திட்டம் வெளிப்படுவதற்கு இது ஆரம்பமாக இருக்கலாம். சம்பவிக்க வேண்டிய காலம் வந்தாயிற்று நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும்.

4. கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டிருக்கிற மிகுந்த உபத்திரவம் என்ற பயங்கரமான நிலையினால் நியாயத் தீர்ப்பின் காலம் அல்லது வேதனை அல்லது சோதனைக் காலம் வந்திருக்கிறது என்று உறுதியாகிறது. இந்த வசனத்தின் கூற்று 12-ம் வசனத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் 'உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற ......' என்ற வாசகத்தின்படி, சோதனைக் காலம் வந்திருக்கிறது என்று கூறுகிறது.

நியாயத் தீர்ப்பு என்றால் இறுதி நியாயத் தீர்ப்பு என்பதுதான் சாதாரணமாக நம்முடைய மனதில் தோன்றும் எண்ணம். ஆனால் நாம் மேலே சொல்லியுள்ள நான்காவது கருத்தில் கண்டுள்ளபடி, இறுதி நியாயத் தீர்ப்பு என்பதைவிட அது வேறு ஒன்றைக் குறிப்பதாகக் கூட இருக்கலாம். எனவே மேலே சொல்லப்பட்டுள்ள கருத்துகளின் சாதக பாதகங்களை பின்வரும் காரியங்களின் வெளிச்சத்தில் பார்க்கும்படி உங்களையும் அழைக்கிறேன்.

முதலாவது கருத்துக்குச் சாதகமாகச் சொல்லப்பட்டிருக்கிற உண்மை இயற்கையானதாகத் தோன்றுகிறது. ஒரு வேளை நியாயத் தீர்ப்பு துவங்கலாம் என்ற சூழ்நிலை இருப்பதால், கிறிஸ்தவர்கள் உஷாராக இருக்கவேண்டும். சோர்ந்து போகவோ, பின்வாங்கிப் போகவோ கூடாது என்று அறிவுரை கூறியதாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அதில் குறிப்பிட்டுள்ளபடி இறுதி நியாயத்தீர்ப்பு சுமார் 1900 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நிகழவில்லை, சீக்கிரம் நிகழும் என்பதற்

கான அறிகுறிகளும் தென்படக்காணேம் என்ற நிலை இக்கருத்துக்கு உடன்பாடு இல்லாமல் முரண்பட்டு நிற்கிறது.

இரண்டாவது கருத்துக்குச் சாதகமாயிருக்கிற உண்மை என்னவெனில், புதிய ஏற்பாடு நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பல இடங்களில் தெளிவாகக் கூறுகிறது. "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும்." 2 கொரி5:10. நல்லவர் தீயவர் என்று இல்லாமல் அனைவருக்கும் நியாயத் தீர்ப்பு உண்டு. யோவான் 5:28, 29; வெளி 20:10-15. நியாயத் தீர்ப்பு நிகழும் காலம் எவருக்கும் தெரியாது. மத் 24:36; 1 தெச 5:1,2.

இந்தக் கருத்து குறிப்பிட்டுள்ள இந்தப் பகுதிக்கு எப்படிப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதைக் கவனியுங்கள். இறுதி நியாயத் தீர்ப்பு உறுதியாக வரும் என்றும், துன்மார்க்கர்களும், மறுதலித்துப் போனவர்களும் இரட்சிப்பில் பங்கடைவதில்லை என்றும் கூறுகிறது. ஆகவே கிறிஸ்தவர்கள், தங்களுக்கு நேரிடுகிற துன்பங்களையும் பாடுகளையும் சகித்துக்கொண்டு வரப்போகிற நியாயத் தீர்ப்பைச் சந்திப்பதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு காத்து இருக்கவேண்டும் என்றும் கூறுகிறது. இந்நிருபத்தின் நான்காம் ஐந்தாம் அதிகாரத்தின்படி கர்த்தர் நியாயத் தீர்ப்புச் செய்யத் தயாராக இருக்கிறார் என்று அறிகிறோம். ஆயினும் அப்போஸ்தலர்கள் பவுலும், பேதுருவும் வேறு இடங்களில் நியாயத் தீர்ப்பை தேவன் வேண்டுமென்றே தள்ளிப் போட்டுக்கொண்டு போகிறார் என்று கூறுகின்றனர். ரோமர் 2:3-10; 2 பேதுரு 3:9.

இந்தக் கருத்துக்கு முரணான நிலை என்னவெனில் நியாயத் தீர்ப்பு இதோ சமீபித்துவிட்டது. நியாயத் தீர்ப்பு துவங்கும் காலம் வரும் என்று 17-ம் வசனமும், 12 முதல் 19-ம் வசனங்களின் தொனியும் "எதிர்காலத்தில்" என்று கூறாமல் "உடனே" என்றும் அர்த்தம் கொள்ளும்படி அமைந்திருக்கிறது. இதே நிருபம் 1:6, 7 வசனங்களோடு இந்தப் பகுதியையும் ஒத்திட்டுப் பார்த்தால், தேவனுடைய வீட்டாருக்கு சோதனையின் காலம் ஆரம்பமாகிவிட்டது என்றும், அச்சோதனைகளை ஏற்றுக்கொண்டு சகிப்பது அவசியம் என்றும் வரப்போகிற பாடுகளுக்கும் துன்பங்களுக்கும் தற்சமயம் நீங்கள் படுகிற துன்பங்கள் முன்னோடியே என்றும் கூறுவதை கவனிக்கலாம்.

மூன்றாவது கருத்துக்கு ஆதரவாக பழைய ஏற்பாட்டில் சில தீர்க்கதரிசன வசனங்கள் உண்டு. நியாயத் தீர்ப்பு தேவனுடைய நகரத்திலும் (எரே 25:29) பரிசுத்த ஸ்தலத்திலும் தொடங்கும் (எசே 9:6) என்று கூறுகிறது. இதைக்குறித்து, பழைய ஏற்பாட்டின் கடைசித்

தீர்க்கன் மல்கியா கூறும்போது, ''தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்'' என்று கூறுகிறார். அவ்வாறே யோவான் ஸ்நானகனுடைய ஊழியம் நியாயத் தீர்ப்புக்கு ஆயத்தம் செய்த ஊழியமாகக் கருதப்படுகிறது. மத் 3:1-12.

நான்காவது கருத்தில், நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிற 12 முதல் 19 வரை உள்ள வசனப்பகுதியில் காணப்படுகிற ''நியாயத் தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது'' என்ற நிலைக்கு பொருத்தமாயிருக்கிறது.

தேவனுடைய வீடாகிய சபை **முதலில்** துன்புறுத்தப்படும் என்பதிலிருந்து அவிசுவாசிகளும், கீழ்படியாதவர்களும் கூட (பின்னர் ஒரு கட்டத்தில்) சோதிக்கப்பட்டு, உபத்திரவப்பட்டு, நியாயத் தீர்ப்பை சந்தித்தாகவேண்டும் என்ற கருத்து தொக்கி நிற்கிறது.

**ஆனால் சில வித்தியாசங்கள்:—**

ஒருவன் கிறிஸ்துவுக்குள் உண்மையுள்ளவனாக இருந்து உபத்திரவப்பட்டால் அவனுக்குப் பின்னர் மகிழ்ச்சி உண்டு. (வ 13) ஆசீர்வாதமும், மகிமையும் உண்டு (வ 14) தேவனை மகிமைப்படுத்தும் நிச்சயம் உண்டு (வ 16) அதேபோல் கீழ்ப்படியாதவர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் பாடுகளும் நியாயத் தீர்ப்பும் நிச்சயம் உண்டு. ஆனால் அவர்கள் பாடனுபவித்தாலும், கிறிஸ்தவர்களுக்குப்போல் ஆசீர்வாதம் வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை. அவர்கள் பாடு அனுபவிப்பதோடு சரி, பயன் எதையும் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் படுகிற துன்பங்களுக்கு பிரதியுபகாரம் கிடையாது என்பதோடு மட்டும் அல்ல, சொல்லப்போனால் அவர்களுடைய உபத்திரவம் முன்னைவிட அதிகமாக இருக்கும்.

நியாயத் தீர்ப்பு கிறிஸ்தவர்களிடமிருந்து துவங்கும் என்று கூறியவண்ணம், அது ஏற்கனவே தொடங்கி விட்டது. அப்படியானால் சுவிசேஷத்துக்குக் கீழ்படியாதவர்களுடைய, தேவனை விசுவாசியாத மக்களின் நிலை என்ன? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவர்கள் நீதியின்மித்தம் துன்பப்படுவதற்குத் தங்களை ஒப்புக் கொடாமல் கிறிஸ்தவத்தை அசட்டை பண்ணி, அதனைப் பின் பற்றுபவர்களையும் துன்புறுத்தின படியால் தேவ கோபாக்கினைக்கு ஆளாவார்கள். 2தெச 1:7 கிறிஸ்தவர்கள் அவர்களால் இழைக்கப் படும் அநீதிகளுக்கும், துன்பங்களுக்கும் ஆளானாலும் பரவாயில்லை. ஆனால், தேவனுடைய கோபத்துக்கு ஆளாகாதிருங்கள். ஏனெனில் நீங்கள் நீதியினிமித்தம் துன்பப்பட்டால் நீங்கள் பாக்கியவான்களாக இருப்பீர்கள். 1பேதுரு 3:14 நீங்கள் நீதியினிமித்தம் துன்பப்பட

மறுத்தால் தேவனுடைய நீதியுள்ள கோபாக்கினைக்கு ஆளாகும் மக்களோடு சேர்த்துக் கொள்ளப்பட்டு வாக்குத்தத்தம் செய்திருக்கிற ஆசீர்வாதங்களை இழப்பீர்கள்,

''நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் ...(வ 18) என்று சொல்வதில் இருந்து கிறிஸ்தவ ஜீவியம் கடினமானது என்பதை அறிகிறோம். கறைபட்டுக் கிடக்கிற கோணலும் மாறுபாடுமான சந்ததிக்குள் பரிசுத்தமாய் வாழ்வது என்பது மிகச் சிரமமான காரியம். கிறிஸ்துவின் பாடுகளை எண்ணிப் பாருங்கள் அவைகள் அநீதி நிறைந்தது. கொடூரமானது. சகிக்க முடியாதது. 1பேது 2:20,21 மேலும் உண்மைக் கிறிஸ்தவர்களின் வழிமுறைகளைச் சொந்தப் புருஷன் அல்லது மனைவி, நண்பர்கள் உலகப் பிரகாரமான எஜமான்கள் ஆகியோர் கூட சில சமயங்களில் எதிர்ப்பார்கள். 1பேது 2:18, 19;3:1-5. கிறிஸ்தவர்களுடைய நல்ல நடக்கையைத் தூஷிப்பார்கள். அக்கிரமக்காரர் என்று பழிப்பார்கள். 1பேது 3:16, 2:12; 4:4 கிறிஸ்தவர்களுக்கு எதிராக சாத்தான் கர்ஜிக்கிற சிங்கத்தைப் போல சுற்றித் திரிவான். கிறிஸ்தவர்கள் துன்பப்படுவது தவிர்க்க முடியாதது. 1பேதுரு 5:8-10

ஆம் சகோதரனே சகோதரியே, மோட்சப்பிரயாணம் சிலுவையைச் சுமந்து, தியாகம் செய்து பாடு அனுபவித்துச் செல்ல வேண்டிய பயணம். பரலோக யாத்திரை கல்லும் முள்ளும், இருளும் நிறைந்த கானகப் பாதை. அதை கடந்து செல்வது எளிதல்ல. கிறிஸ்தவ வாழ்க்கையில் இருக்கும் சிரமங்களைப் பற்றி பேதுருவின் முதலாம் நிருபம் மட்டும் அல்ல, புதிய ஏற்பாட்டின் பல பாகங்களிலும் சொல்லப் பட்டிருக்கிறது ''இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரம் உண்டு'' யோவான் 16:33 ''அநேக உபத்திரங்களின் வழியாய் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும். அப் 14:22;' 'நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்த போது உங்களுக்கு முன்னறிவித்தோம். அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்' ' 1 தெச 3:4; ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாயிருக்க விரும்புகிற யாவரும் துன்பப்படுவார்கள்.' 2 தீமோ 3:12. 'ஆகையால் நீங்கள் களைப்புள்ளவர்களாய், உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகிக்க அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் இரத்தஞ் சிந்தப்பட்டதற்காக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.' எபி. 12:3,4. பரம விரோதியும் இரக்கமில்லா அரக்கனுமாகிய சாத்தானும் அவன் ஆட்சியின் கீழ் உள்ள உலகமும் உண்மை கிறிஸ்தவர்களை நிம்மதியாக வாழ விடாமல் பல தொல்லைகளை ஓயாமல் கொடுத்துக்கொண்டேயிருந்தாலும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழத்

தருந்ததே. ஆனால் கீழ்ப்படியாதவர்களுக்கும் தேவனுக்கு விரோதமான மக்களுடைய வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. அவர்களுக்கு இந்த அளவுபாடுகளும், துன்பங்களும், இல்லையென்றாலும் அதன் முடிவு இன்பம் பயப்பதல்ல. அவர்கள் நித்திய துன்பத்தையும், தேவனிடமிருந்து என்றென்றும் பிரிக்கப்பட்ட நிலையயும் முடிவில்லா அழிவையும் அடைவார்கள் 2 தெச 1:6—10.

இந்த நிலையில், கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? முதலாம் நூற்றாண்டானாலும் சரி, இருபதாம் நூற்றாண்டு ஆனாலும் சரி, உபத்திரவங்கள் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் பின் வாங்குவதோ, மறுதலித்துப்போவதோ கூடாது. அப்படிச் செய்வோமானால் சாத்தானுக்கு வெற்றி. கிறிஸ்துவுக்குத் தோல்வி. கிறிஸ்தவர்களுக்கும் மகிமை-யிழப்பு, மகிழ்ச்சிப் பங்கம், நித்திய ஜீவன் ஆகிய நஷ்டங்கள். ஆகவே 19-ம் வசனத்தில் கூறியுள்ளவாறு தேவனுடைய சித்தத்தின்படி பாடனுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டி கர்த்தாவாகிய அவருககு ஒப்புக்கொடுக்கக் கடவர்கள்.

தயவுசெய்து கர்த்தரை நம்பி தைரியமாயிருங்கள். கொஞ்ச காலத்துக்குப் பிறகு இப்பாடுகள் முடிந்துபோகும். 1 பேதுரு 5:10 பின்னர் உங்களுக்குப் பாராட்டுதலும், நன்மதிப்பும், மகிமையும் உண்டாகும். உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைவீர்கள் 1 பேதுரு 1 : 7, 9.

—கரீல் ஜோன்ஸ்

---

28 ஆம் பக்கத் தொடர்ச்சி

பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தமும், பாவமன்னிப்பும் எருசலேம் துவங்கிச் சொல்லப்படவேண்டும் என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

"உலக முழுவதும் போங்கள்—
நற்செய்தியை அறை கூவுங்கள்"
நம்புவோருக்கு - கீழ்படிவோருக்கு
பாவ மன்னிப்பு அருளும் ஞான ஸ்நானம் கொடுங்கள்

என்று சொல்லிவிட்டுப் பரமேறினார்!

அவர் வருகின்றார்! ஆம்; மீண்டும் வானத்தின் வழியாய் வருகின்றார். சபையாகிய தம்முடைய மக்களை தம்மிடம் அழைத்துச் செல்ல நடுவானிலே தோன்றுவார்.

பீட்டர் சாலமோன்

# புதிய ஏற்பாட்டை நான்
# சிலுவை வழியே காண்கிறேன்.

"அவர் வருகிறார்"—அந்த ஊரெல்லாம் இதே பேச்சு.

ஆம்...,மனிதருக்குள் வாழும் இயேசு—தேவனுடைய ஒரே பேறான குமாரன் வருகிறார்!

அவர் நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்தார்!

மக்கள் விடியற்காலை முதலே அவர் வருகை வேண்டி அவ்வூர் பெரியதெரு வழியே கூட்டம்கூட ஆரம்பித்தனர்.

மக்களின் கண்களில் ஆச்சரியமும், நம்பிக்கையும் நிறைந்த பார்வை!

நிரந்தர விடுதலைக்காக எங்கும் பல்வேறுபட்ட வியாதியஸ்தர்கள், சுகமளிக்கும் கரங்களைக் கண்டிடக் காத்திருந்தனர்!

குருடர்கள் வழியிலே நின்று, தேவனுடைய குமாரனே! எங்களுக்கு இரங்கும் எனக் கூவிக்கொண்டிருந்தனர்!

"அவரின் வஸ்திரத் தொங்கலின் முனையையாகிலும் இதொட்டாலும் போதும்.. என் தீராத வியாதி என்னை விட்டு நீங்கும்"-பெரும்பாடுள்ள தாய்!

அவருக்குள் ஒளி இருந்தது! அந்த ஒளி எந்த மனிதனையும் பிரகாசிக்கச் செய்கிற மெய்யான ஒளி.

மக்கள் ஓர் புதிய வாழ்க்கையை—

புண்ணிய வாழ்க்கையை—

அவருக்குள் தொடங்கக் காத்திருந்தனர்!

ஏனென்றால்,

அவரிடத்தில் சேருகிறவன் கைவிடப்படுவதில்லை!

அவர்—பாவத்தில் மாண்டு சீரழிந்துபோன சிக்கலான வாழ்க்கைக்கு,

தனது மரணத்தினால்.

தாம் சிந்திய இரத்தத்தினால்.

தம்முடைய புதிய ஆவிக்குரிய இராஜ்ஜியத்தினால் மன்னிப்பளித்து, நித்தியவாழ்வை அளிக்கிறார்.

அவருடைய போதனைகள்: நொறுங்கித் திருண்டு போன அருமருந்தாம்.

''இந்த இயேசு எப்படிப்பட்டவர்!

சமுதாயத்தால் ஓரம் கட்டப்பட்டு, சரீரத்திலும் குள்ளமான சகேயு என்ற பாவி மனிதனுக்கு ஆசை வந்தது! அவன் நீண்ட நாட்களாகவே தன் உண்மையான ஆன்மாவைப் பற்றி அறியவும்-பாவத்திலிருந்து மீளும் வழியென்ன என்ற ஆய்வில் ஈடுபட்டிருந்தவன்

நல்லவேளை அவர்வருகிறார்!
நான் எபபடி அவரைப் பார்ப்பது?
நான் குள்ளனாயிற்றே!
மக்கள் மத்தியிலே நான் போனதும் பரிகசிக்கப்படுவேனே!
ஒன்று செய்வேன்
யாரும் என்னைப் பார்க்கமுடியாத காட்டத்தி மரத்தில்;
அது—மரங்களிலே மட்டமானது
பிரயோஜனமற்றது—
பயன் படாதது—
ஆனால் அடர்த்தியானது!

ஆம்! அதிலே நான் ஏறி யாருக்கும் தெரியாத வண்ணம் அவரைக் கண்ணோக்குவேன். லூக்கா 19:1-10.

இந்த இயேசு கிறிஸ்துவை, அவரின் புதிய ஏற்பாட்டை இன்றைக்கும் அறிந்து கொள்ள வேண்டுமானால் எருசலேமுக்கு வெளியே மண்டையோடு போன்ற கபாலஸ்தலத்தில் மனிதரால் புறக்கணிக்கப்பட்ட — கைவிடப்பட்ட சிலுவை மரத்தின் மீதேறி காட்டத்தி மரத்தில் அல்ல)

மனுகுலத்தின் பாவமும்-சாபமும்-நீங்கும் குருதி வடியும் அந்த சிலுவை மேலே ''எல்லாம் முடிந்தது'' என்று சொல்லி நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினாரே, அங்கிருந்து எனது புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டத்தைத் துவங்குகிறேன்.

சிலுவையே புதிய ஏற்பாட்டின் ஆரம்பம், அடித்தளம், வேத வாக்கியங்களின்படி அவர் மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார்.

வேத வாக்கியங்களின்படி-தாம் சொன்னபடியே மூன்றும் நாளில் அவர் உயிர்த்தெழுந்தார்

சுமார் நாற்பது நாட்கள் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றித் தமது அடியாராகிய அப்போஸ்தலருக்கு போதித்துத் தாம் மரித்தும்-உயிரோடே இருப்பவராக சான்றுகளுடன் தம்மைக் காண்பித்தார்.

## கிறிஸ்துவின் சபை கூடும் இடம் :—

1. கொலக்கொம்பை—643 218. நீலகிரி மாவட்டம்.
2. பீமநகர், திருச்சி-620 001.
3. 85, 9-வது அவன்யூ, கல்பாக்கம்-603 102.
4. அப்பர் சிங்காரா எஸ்டேட், குன்னூர்-643 101. நீலகிரி மாவட்டம்.
5. அகர்நகர், அரக்கோணம்-631 002. வ. ஆ. மாவட்டம்.
6. 4, ஆபீத் நகர், சூளைமேடு, சென்னை-600 094.
7. 44, நேதாஜி ரோடு, நாகப்பட்டிணம்-611 101.
8. சிவசண்முகம் வீதி, புதுப்பாளையம், கோபி நகராட்சி. பெரியார் மாவட்டம்.
9. இயேசு இல்லம், 3, பாட்டரி டவுன் நியூ லே-அவுட், 3-வது குறுக்கு, பெங்களூர்-560 046.
10. 44/162, எஸ்தர்காட்டேஜ், கோத்தகிரி-643 217. நீலகிரி மாவட்டம்.
11. ஜீயாபுரம், திருச்சி மாவட்டம்-639 101.
12. செவ்வாய்ப்பேட்டை, R. S. ரோடு, தொழுவூர் P. O. திருவள்ளூர் Tk.
13. மதலைப்பட்டி, பூலாம்பட்டி அஞ்சல், இலங்காகுறிச்சி (வழி) திருச்சி மாவட்டம்—621 302.
14. சுப்ரமணியபுரம், திருச்சி-620 020.
15. B. கொமராபாளையம், சேலம் மாவட்டம்.
16. ஜெயராம்செட்டி தெரு, சைதாப்பேட்டை. சென்னை-600 015.
17 A. V. K ரோடு, அயனாவரம், சென்னை-600 023.

# வாசக அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு!

விலாசங்கள் கொடுத்தவர்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாத இதழ்கள் இரண்டுமோ அல்லது இரண்டில் எதாவது ஒரு மாதத்துக்கோ வந்து சேராவிட்டாலும் ஒன்றுக்கும் அதிகமான இதழ்கள் வந்து கொண்டிருந்தாலும் தயவு செய்து எங்களுக்குத் தெரிவியுங்கள். பிரதி மாதம் 20-ம் தேதியன்று இதழ்கள் வெளி வருகிறது. ஒவ்வொரு மாதம் 25-ந் தேதிக்குள் இதழ்கள் வந்து சேராவிட்டால் எங்களுக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்

Edited by E. Z. Selvanayagam and Published by
Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to ;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.